# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, சித்திரை 17 உ வியாழன் (30-4-70) ஸபர் பிறை 23 — புத்தகம் 24 இதழ் 25


## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்:

## பச்சை பச்சையாக வாந்தி எடுப்பதேன்?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் யூ.என்.பி, யின் பிரச்சாரக் கருவியா? டட்லியின் வீட்டுச் சொத்தா?—இவ்வாறு கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள் பொதுமக்களும், மாற்றுக்கட்சியினரும்!

இதற்கு காரணம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாக நடத்தப்பட்டு வரும் திட்டமிட்ட பிரச்சாரங்களாகும்.

இதுபற்றி நுகேகொடையைச்சேர்ந்த ஆ.ரகுஸ்ரீதரன் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.

இப்பொழுது தினமும் வானொலி வாந்தியெடுக்கிறது. ஆம்! ஐ. தே. க.வின்

(4-ம் பக்கம் பார்க்க)



# யூ. என். பி., கூட்டுக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம்!

## தமிழ் பேசும் மக்கள் பெரும் ஏமாற்றம்!

(கொழும்பு நிருபர்)

தமிழ் பேசும் மக்களின் மிக முக்கிய அடிப்படைப் பிரச்சினையான போதனா மொழிப் பிரச்சினை சம்பந்தமாக ஐ. தே. கட்சியும் கூட்டுக் கட்சிகளும் தங்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தெளிவற்ற நிலையில் மழுப்பியிருப்பது குறித்து தமிழ் பேசும் மக்களுக்கு இக்கட்சிகள் மீது அவநம்பிக்கையும் வெறுப்பும் அதிகரித்திருக்கிறது.

சிங்கள பிள்ளைகளுக்கு சிங்களம் போதனா மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுபோல தமிழ் பிள்ளைகளுக்கு தமிழே போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று தமிழ் பேசும் மக்களும் விடாப்பிடியாககோரி வருகிறார்கள். இந்த அடிப்படைக் கோரிக்கையை பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அரசாங்கப் பாராளுமன்றக் குழு கூட்டத்தில் ஏற்றுக்கொண்டார். ஆனால்



பின்னர் பாராளுமன்றத்திலோ அதிலிருந்து நழுவிப் பதிலளித்தார்.

தாய் மொழியே போதனா மொழியாக இருக்குமென்று தாம் மட்டுமே ஏற்றுக் கொண்டதாகவும் அக்கொள்கை அரசாங்கக் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றும்பாராளுமன்றத்தில் கூறி பிரதமர் அடி சறுக்க முயன்றார்.

வடக்கில் சில பாடசாலைகளில் தமிழ் பேசும் பிள்ளைகளின் போதனா மொழியாக சிங்களத்தை திணிக்க கல்வியமைச்சர் எடுத்த முயற்சிகள் தமிழரசுக் கட்சியின் கடுமையான எதிர்ப்பினால் பின்னர் கைவிடப்பட்டன என்பது தெரிந்ததே.

எனினும், சிங்களமே அப் பாடசாலைகளின் போதனா

(4ம் பக்கம் பார்க்க)

### விட்டெறிந்த வட்டமேசையை மீண்டும் கட்டியழும் விந்தை!

1181 நியෝජිත මන්ත්‍රී මණ්ඩලය 1182

[පොන්නම්පලම් මයා.]

was sought to be discussed on the Floor of this House, whatever Government that was in power was compelled, either immediately or soon thereafter, to declare an Emergency. I say it is very sad to contemplate it because I have heard it said and I have heard it repeated *ad nauseam* by my hon. Friends opposite that it is as much their concern to bring about a solution of these questions of the language issue as it is of this Government.

The question that one must first consider is whether the largest component part of the National Government, namely, the United National Party, did or did not have a mandate to attempt to solve the language issue if they were brought into power. My respectful submission to my hon. Friends opposite would be that, at the last General Election, there was a clear general mandate for a solution of this problem given to the United National Party. I hear in a very soft voice the interjection about a round table. Very well! You are taking me out of my ambit. I will meet it straightway.

Sir, unquestionably both in the U.N.P. manifesto and in our own manifesto we had unequivocally advocated the raising of the language issue as a non-partisan issue, as an all-party issue out of the ambit of party politics, in order that the matter may be solved for all time. And may I say this? I say this quite honestly. I was disappointed. I believe the Prime Minister was disappointed in not being able to bring this matter up before an all-parties conference. But today, after having seen the filibustering effort of the hon. Member for Dompe (Mr. F. R. Dias Bandaranaike) for over six-and-a-half nauseating hours, I would like to say this, and I say it more in sorrow than in anger. He said unequivocally—and he nailed that statement to the counter for now and hereafter—that, speaking as a responsible *ex*-Minister and as an office-bearer fo the Sri Lanka Freedom Party, his party was committed irrevocably to the position that this country must be one country, must be the home of one nation and of one language. I thought that kind of jingoism was forgotten after 1945, that that sort of chauvinism was forgotten with Hitler, but now, having heard that, I am prepared to tell my people that I who advocated strongly the solution of this matter at an all-parties conference cannot and could not have sat around a table with a person like the hon. Member for Dompe.

I wish to go further. I am sorry the hon. Fair Leader of the Opposition is not here. During the time that she was Prime Minister I had gone to her, spoken to her, appealed to her, to bring this matter up before a round-table conference. I do not wish to make a charge against her. I had spoken to my Hon. Friend the present Prime Minister at that time. They were both willing to take up this problem. It is for my hon. Friends on the other side to search who were the niggers in the woodpile who prevented a solution of this question even during the last regime by means of a round-table conference.

This time, after the General Election I spoke to the hon. Member for Dompe, or rather he spoke to me, but at no time was he prepared to tell us the basis of the negotiation. Therefore, let this canard now rest. I repeat, if there is one man who has got to offer an explanation to his people in the north, it is I. I have stood, and stood unequivocally, for a round-table conference, and I say this: You have deprived me of the opportunity of having this matter settled at an all-party conference by the utterly uncompromising attitude taken by the hon. Member for Dompe.

ස්ටැන්ලි තිලකරත්න මයා.

(திரு. ஸ்டான்லி திலக்கரத்ன)

(Mr. Stanley Tillekeratne)

The Federal Party; they are the villains.

விபரம்: 2ம் பக்கம் 'எண்ணத்தில்'

## பொதுமேடைக்கு பதுங்கினார் தமிழ் காங்கிரஸ் நடராசா!

பருத்தித்துறை, ஏப். 27

தும்பளை மேற்கு வாலிபர் கழகம் அரசியல் நிலைபற்றி கருத்துத் தெளிந்திட பருத்தித்துறைத் தொகுதியிலே பொதுமேடை அமைக்க முன்வந்தார்கள். பொது மேடைக்கான அழைப்பை திரு. க. துரைரத்தினம் (தமிழரசு), திரு ந. நடராசா (காங்கிரஸ்) ஆகியோருக்கு விடுத்தனர். திரு. துரைரத்தினம் பொதுமேடை அழைப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் திரு. நடராசா பொது மேடை அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார்.

இதனால் தும்பளை மேற்கு வாலிபர் கழகம் திரு. துரைரத்தினம் அவர்களையே தாம இம்முறை முழுமூச்சாக ஆதரிப்பதாக முடிவெடுத்துள்ளனர். பொதுமேடைப் பிரச்சினை காரணமாக பல நடராசா அபிமானிகள் தமிழரசுக்கட்சியை ஆதரிக்க தொடங்கி விட்டனர். நடராசாவின் செல்வாக்கு பருத்தித்துறை நகரிலே நாளுக்கு நாள் தேய்ந்து வருகின்றது.

## தொண்டமான் நிலை என்ன

அட்டன், ஏப் 24

மலையகத்தின் கேந்திரஸ்தானமான நுவரேலியா, மஸ்கெலியா ஆகிய இரு தொகுதிகளிலும் இரு தமிழர்கள் போட்டியிடுகின்றனர்.

மஸ்கெலியா தொகுதியில் திரு. வி. கே. வெள்ளையனும் நுவரேலியா தொகுதியில் திரு. சி. வி. வேலுப்பிள்ளையும் போட்டியிடுகின்றனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## அவர்களும் நாங்களும்!

காங்கிரஸ்காரர்கள் யூ. என். பியுடன் இரண்டறக் கலந்துவிட்டார்கள். நாம் யூ. என். பியுடன் சேர்ந்த முறைவேறு; காங்கிரஸ்காரர்கள் கலந்தமுறை வேறு. அவர்கள் கஞ்சிக்குள் தேங்காய்ப்பால்போல கலந்துவிட்டார்கள். நாங்கள் கூழுக்குள் பலாக் கொட்டை போல் கலந்தோம்—அவர்கள் உபசபாநாயகர் பதவிக்காக கலந்தார்கள்—நாம் உரிமை கேட்க கலந்தோம்.

தந்தை செல்வாவும், இரும்பு மனிதர் நாகநாதனும், தமிழரசுத் தலைவர் இராசமாணிக்கமும் தளபதி அமிர்தலிங்கமும் சொல்லின் செல்வர் இராசதுரையும் நடுநிசியில் 12 மணியளவில் தூக்கத்தை துறந்து அலரி மாளிகையிலும் வூட்லண்ட்சிலும் பிரதமரைச் சந்திப்பார்கள்—கோணேசர் ஆலயவிடயமாக பல்கலைக்கழக பிரச்சினைக்காக மாவட்டசபை மசோதா பற்றி பேசுவதற்காக! ஆனால் தனிப்பெருந்தலைவரும் உபசபாநாயகரும் வவுனியா பிரதிநிதி சிவசிதம்பரமும் யாழ்ப்பாணத்திலிருந்து 19 ஆசிரியர்களை கிளிநொச்சிக்கு மாற்றிவிட்டார்கள்; அவர்களை மீண்டும் யாழ்ப்பாணம் மாற்ற வேண்டுமென்று கோரி பிரதமரைச் சந்திப்பார்கள்—இவர்களால் தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெற்றுத்தரமுடியுமா?

—திரு. மு. ஆலாலசுந்தரம், (அளவெட்டிக் கூட்டத்தில்).

# எண்ணம்

தமிழ் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை—2

## உமிழ்ந்த எச்சிலை விழுங்கும் மனிதர்கள்!

வேதாளம் மீண்டும் முருங்கைமரத்தில் ஏறி உட்கார்ந்துவிட்டது; வட்டமேசையும் தமிழ் காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மீண்டும் இடம் பிடித்துக்கொண்டிருக்கிறது.

ஆம், தாமே தமது கைப்பட தூக்கியெறிந்துவிட்ட உடைந்துபோன வட்டமேசையை எடுத்து வந்து ஒட்ட வைத்து தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்திருக்கிறார் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம்.

மக்களிடம் முன்வைப்பதற்கு ஒழுங்கான கொள்கை ஏதுமற்றவர்கள் வேறு என்னதான் செய்ய முடியும்?

1956ம் ஆண்டு முதல் தமிழ் காங்கிரஸ் தலைவர் பாடி வரும் வட்டமேசை ராகம் இன்னும் முடிந்த பாடாகத் தெரியவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை பொதுத் தேர்தல் வரும் போது பலத்த குரலில் இராகமிழுத்து மேடைக்கு மேடை 'வட்டமேசை' பல்லவியைப்பாடும் தமிழ் காங்கிரஸ் தலைவர்—பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் வட்ட மேசையைத் தூக்கி மூலைக்குள் எறிந்துவிடுவார்—பின் அடுத்த தேர்தல் வரும்போது அந்த மேசையைத் தேடிப் பிடித்து துடைத்து மக்களுக்கு காட்டி ஒட்டு வாங்க முயலுவார். இதுவே அவரது வழமையான அரசியல் செப்படி வித்தையாக இருந்து வருகிறதென்பதை எவரும் மறுக்க முடியாது;

வட்டமேசை மாநாட்டில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் எதையுமே தீர்ததுவிட முடியாதென்று நாம் நம்புகிறோம்; தமிழரசுக் கட்சியும் நம்புகிறது; திரு. பொன்னம்பலமும் நம்பினார் 1966ம் ஆண்டு. அது மட்டுமன்றி வட்டமேசையை நிராகரித்தார்—அதுவும் பகிரங்கமாகப் பாராளுமன்றத்தில்—என்ற உண்மையை கேட்டு மூர்ச்சித்து விடாதீர்கள். ஆம் அன்று உமிழ்ந்த எச்சிலை இன்று மீண்டும் விழுங்குகிறார் தமிழ் காங்கிரஸ் தலைவர்!

ஏனெனில் இதை விட்டால் அவருக்கு மக்களுக்கு சொல்வதற்கு வேறு கொள்கை ஏதுமில்லையே!

இதோ, வட்டமேசை திட்டத்தை முற்றாகத் தாம் நிராகரித்து விடுவதாக திரு. பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் 26-1-1966ல் வெளியிட்ட கருத்துக்களை கீழே தருகிறோம். திரு. பொன்னம்பலத்தின் பேச்சு இடம் பெற்ற ஹன்சார்ட் பிரதியின் 'போட்டோ ஸ்டாட்' படமே முன் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

அன்று என்ன சொன்னார் திரு. பொன்னம்மலம்?

"Sir, unquestionably both in the U. N. P. manifesto, and in our own manifesto we had unequivocally advocated the raising of the language issue, as an all party issue out of the ambit of party politics, in order that the matter may be solved for all time. And may I say this? I say this quite honestly. I was disappointed. I believe the Prime Minister was disappointed, in not being able to bring this matter up before an all party conference."

—HANSARD, House of Representatives, Col. 1181.

'...ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனமும், எங்கள் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனமுமே மொழிப்பிரச்சினையைக் கட்சி அரசியலுக்கு அப்பால் சகல கட்சிகளினதும் பிரச்சினையாக்கி அதற்கு ஒரு நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்று கூறியது. இப்பொழுது ஒன்றை மிக நேர்மையாகக் கூறவிரும்புகிறேன். நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன் பிரதமரும் ஏமாற்றம் அடைந்திருப்பார் என்று நம்புகிறேன், இதைச் சகல கட்சிகளும் கொண்ட மாநாடுக்குக்கொண்டு வர முடியாததையிட்டு.'

"......I am prepared to tell my people that I who advocated strongly the solution of this matter at an all party conference cannot and could not has sat around a table with a person like the Honourable Member for Dompe."

—HANSARD House of Representatives, Col. 1182.

'......இதற்கு ஒரு தீர்வு சகல கட்சிகளும் அடங்கிய மாநாட்டிலேயே உண்டு என்பதைப் பலமாக வாதிட்ட நான், இப்பொழுது தொம்பே பிரதிநிதி போன்ற ஒருவருடன் வட்ட மேசையில் அமரமுடியாது, அது நடக்கவும் முடியாது என்று கூறுகிறேன்.'

"...You have deprived me of the opportunity of having this matter settled at an all party conference by the utterly uncompromising attitude taken by the Honourable Member for Dompe.',

—HANSARD, House of Representatives Col. 1182.

'......நீங்கள் (எதிர்க்கட்சியினர்) இப் பிரச்சினையைச் சகல கட்சிகளும் அடங்கிய ஒரு மாநாட்டில் தீர்க்கலாம் என்ற எனது நம்பிக்கையை அபகரித்து விட்டீர்கள்.'

இவ்வாறு கூறி வட்டமேசைத் திட்டத்தை அன்று அழுதகுந்திருத்தமாக நிராகரித்துவிட்ட சாட்சாத் திரு. பொன்னம்பலம் தான் இன்று மீண்டும் வட்டமேசையென்று புலம்ப ஆரம்பித்திருக்கிறார். இவரது புலம்பலைக் கேட்க தமிழ் மக்கள் என்ன சுத்த மடையர்களா?

பீலிக்ஸ் போன்றவர்களுடன் வட்டமேசையில் ஒன்றாக இருந்து மாநாடு நடத்தமுடியாது என்று அன்று அறுதி

# டட்லியிடம் தஞ்சமடைந்த காங்கிரசால் தமிழுக்கு சம அந்தஸ்து எப்படி பெற முடியும்?

## ஆனைக்கோட்டையில் அமிர்தலிங்கம் கேள்வி!


(வண்ணார்பண்ணை நிருபர்)

'தமிழ் மக்களின் உரிமையைப் பெறவேண்டுமானால், ஒரே கட்சியின் கீழ் ஒரே தலைமையிலே ஒன்றுபட்டு நிற்கவேண்டும். அப்படி ஒருமித்து கட்டுக் கோப்பாக நாம் நின்றாலே, இழந்துவிட்ட உரிமைகளைப் பெற்றுவிட முடியும். கொள்கையற்றவர்களும், சுய இச்சைகளும் தமிழினத்தை வழி நடாத்த முடியாது. அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்களேயானால், அது இனத்திற்கே கேடு விளைவிக்குமேயன்றி, இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு சுதந்திரத்தை அநுபவிக்க முடியாது, எனவேதான் கொள்கைப்பிடிப்பும், இலட்சியமும், தியாக உணர்வும் படைத்த தமிழரசுக் கட்சியினரை ஒரே அணியில் தெரிவு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் ''அறிவொளி'' சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார். நல்லூர் வேட்பாளர் ''இரும்பு மனிதன்'' இ. மு. வி. நாகநாதன், உடுவில் வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் ஆகிய இருவரையும் ஆதரித்து நடைபெற்ற இக்கூட்டம் ஆறு வயதுச் சிறுவன், செல்வன் க. கலைச்செல்வனின் கட்சித் தேசிய கீதத்துடன் ஆரம்பமாகியது; கூட்டத்திற்கு முன்னராக மிகப் பிரமாண்டமான, டிராக்டர், சைக்கிள் பவனியொன்று, யாழ்-இந்துக் கல்லூரியடியிலிருந்து ஆரம்பமாகி, நாச்சிமார் கோவிலடி, கொக்குவில் மேற்குப் பகுதிகளூடாக கூட்ட மைதானத்தையடைந்தது. பெருந்திரளான பெரியோர்கள், வாலிபர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். வழி நெடுகிலும் மக்கள் பூரண கும்பங்கள் வைத்து மலர்மாலைகளால் சூடி, மீண்டும் ''நல்லூர் பிரதிநிதி'' நாகநாதன் தானென்று உறுதியளித்தார்கள்.

### சமசமாஜிகள் செய்ததென்ன?

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—



கடந்த 56ம் ஆண்டிலே தங்களது கொள்கை 'சம அந்தஸ்து' என்று உறுதி கூறிய சமசமாஜக் கட்சியினர், பத்து ஆண்டுகளின் பின்னர் 66ம் ஆண்டிலே என்ன செய்தார்களென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தேசிய அரசாங்கம் கொண்டு வந்த நியாயமான உரிமைகள் மசோதா சட்டத்தை எதிர்த்தார்கள். அதுமாத்திரமன்றி தமிழ் உபயோகத்திற்கு எதிராக அரசாங்க ஊழியர்களை ஏவிவிட்டு எதிர்க்கச் செய்த சமசமாஜிகளை நாம் நம்பியிட்டு கூறி வட்ட மேசையை நிராகரித்துவிட்ட திரு. பொன்னம்பலத்தை ஒன்று கேட்கிறோம்—பீலிக்சும் அவரைப்போன்றவர்களும் இன்று எங்காவது ஓடி ஒளிந்துவிட்டார்களா? அரசியலிலிருந்து துரத்தப்பட்டுவிட்டார்களா? இல்லையே. அப்படியானால் வட்டமேசை மாநாட்டை இனி யாருடன் நடத்தப்போகிறீர்கள்? ஆர். ஜி. சேனநாயகா, ஹேமா பசநாயகா போன்றவர்களுடனா? தமிழினத்தை சங்காரம் செய்வது எப்படியென்பதையிட்டு அவர்களிடம் ஆலோசனை கேட்கப் போகிறீர்களா வட்டமேசை மாநாட்டில்?

வட்டமேசை என்கிறீர்களே 1956ம் ஆண்டிலிருந்து—அந்த வட்டமேசையில் உங்களுக்கு அந்தரங்க சுத்தியான நம்பிக்கையிருந்திருந்தால் வட்டமேசையைக் கூட்ட இதுவரை என்ன நடவடிக்கையெடுத்திருக்கிறீர்கள்? ஒரு சிறு முயற்சியாவது செய்ததுண்டா?

வட்டமேசை மாநாட்டுக்கு தமிழரசார்தான் முட்டுக்கட்டை என்று கூப்பாடு போடுகிறீர்களே, நீங்கள் வட்டமேசையைக் கூட்டி அதற்கு வரமாட்டோம் என்று தமிழரசுக்கட்சி அடம்பிடித்ததாக ஒரு சிறு சம்பவத்தையாவது உங்களால் கூறமுடியுமா?

உண்மையில் நீங்கள்தான் கடந்த ஆண்டு தமிழ் மக்களின் அதிமுக்கிய பிரச்சினையான போதனா மொழிப் பிரச்சினை குறித்து விவாதிக்க யாழ். மாநகரசபை மண்டபத்தில் தமிழரசுப் பொதுச்செயலாளர் கூட்டியிருந்த வட்டமேசை மாநாட்டுக்கு வரும்படி வருந்தி வருந்தி அழைத்தும் அதற்கு போகாமல் பகிஷ்கரித்தீர்கள். நீங்களா வட்டமேசைபற்றி இனியும் பேசுவது?

வட்டமேசை வட்டமேசையென்று கதறியழும் நீங்கள்—1965 மார்ச் பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் சர்வகட்சி வட்டமேசை மாநாட்டைக்கூட்ட முயலாமல்—உடனடியாக விழுந்தடித்துக்கொண்டு ஏன் யூ. என். பி.யை ஆதரித்தீர்கள்? தமிழர்கள் எல்லோரும் யூ. என். பியையே ஆதரிக்கவேண்டுமென ஒரு பக்கம் சார்ந்து ஏன் பகிரங்கமாக அறிக்கை விடுத்தீர்கள்?

இன்றுகூட உங்கள் வட்டமேசைத் திட்டத்தை தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகள் ஒன்றாவது தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்திருக்கிறதா? ஒன்று கூடச் சேர்க்கவில்லையே! உங்கள் எஜமானர்களான யூ. என். பி. கட்சியினர் கூட வட்டமேசையின் காலை முறித்து வீசிவிட்டார்களே!

எனவே உங்கள் 'வட்டமேசை' வியாபாரம் தமிழ் மக்களிடம் இனி ஒருபோதும் பலிக்காது. ஆகவே 1970 மே 27 உடன் கடையைக்கட்டுவது தவிர தமிழ் காங்கிரசுக்கு வேறு வழியில்லையென்று இப்போதே கூறிவைக்கிறோம்—

பலாமா? 65ம் ஆண்டு தேசிய அரசு அமைக்கப்பட்டவுடன் தோசை—வடை— நல்லெண்ணெய்—ஆட்சிபீடம் ஏறிவிட்டதாகக் கேலி செய்த இடதுசாரிக் கும்பல்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் இடமுண்டா? இவர்களால் தமிழுரிமை பெற்றுத்தர முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### அன்றைய பேசாமடந்தைகள்

தனிப் பெருந்தலைவர் கூறுகின்றார்...48ம் ஆண்டு முதல் 56 வரை தமிழ் மக்கள் திம்மதியாக வாழ்ந்தார்கள். அதன் பின்னர்தான் தமிழினம் சீரழிந்ததென்று...இந்நாட்டின் 60 வீதமான உற்பத்தியை செய்து கொண்டு வாழ்கின்ற மலைநாட்டு மக்களின் பிரதிநிதிகளாக வந்த 8 பேரை மீண்டும் பாராளுமன்றம் வராமற் செய்தவர் ...குளக்கோட்ட மன்னன் கட்டிய கந்தளாய் குளத்தையும், அதனோடு தொடர்பாயமைந்திருந்த தமிழ் நிலங்களையும், மாற்றான் பறித்தெடுக்க, அமைச்சர் பதவி பெற்று உல்லாச உப்பரிகையிலேயே இருந்து கொண்டு, பேசாமடந்தையானவர்; தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு முழுக் காரணமாக தானே இருந்துவிட்டு, இன்று எம்மைப் பார்த்துக் குற்றம் சாட்டுகின்றார் தமிழரசுக் கட்சியால் தான் தமிழினம் சீரழிந்ததென்று... கடந்து முடிந்த நிகழ்ச்சிகளை உடனுக்குடன் மறந்து விடுவதற்கு அறிவிலிகளல்ல... தமிழ் மக்கள் என்பதை, எதிர்வரும் தேர்தல் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்ட வேண்டும்.

### மண் போட்டவர்

திருடன் கொள்ளையடிக்க வரும்போது, அவனிடம் சாவியைக் கொடுத்துவிட்டால் நிலைமை எப்படியாகும்...மலையகத் தமிழரின் உரிமைக்காக வாதாடுவேனென்று வாக்குறுதி கொடுத்து விட்டுச் சென்றவர், யு. என். பி.யுடன் சங்கமமானார், நம்பியனுப்பி வைத்த மக்களின் கண்ணிலே மண்ணைப் போட்டார். தமிழ் மக்களைப் பிரிப்பதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்த சிங்களத் தலைவர்கள், நல்லதொரு சூழ்நிலை வந்துவிட்டதென்று உளவுப் படையாக எண்ணிக்கொண்டு, செய்தசூழ்ச்சிகளை, திறமைசாலியெனறும், அரசியல் ஞானியென்றும் கூறிக்கொண்டு திரியும் தனிப்பெருந் தலைவரால் ஏன் உணரமுடியாமற்போது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். அமைச்சர் பதவியைக் கண்டதும் வாக்குறுதிகளை மறந்தார். இனத்தின் காவலன்தானேயென்று சென்றவர், பதவிக்காக இனத்தையே காட்டிக்கொடுத்தார், இதனாலேயே தமிழினத்திற்கு இவ்வளவு கஷ்டமும் வந்தது. தான் செய்த துரோகங்களை மறைப்பதற்காகத்தான் இன்று தந்தை செல்வாவை பதவி ஆசை பிடித்தவரென்றும். மந்திரிப் பதவி கிடைக்கவில்லையென்ற காரணத்தாலேயே காங்கிரசைப் பிளவு படுத்தினாரென்றும் தூற்றித் திரிகின்றார். எது முழுப்பொய், எது உண்மையென்பதை, தமிழ் மக்கள் அறிவார்கள்.

48லே தந்தை செல்வா கூறியதை 56லே தான் மக்கள் உணர்ந்துகொண்டு தமிழரசுக் கட்சியிடம் தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சி சார்பில்
# தீவுப்பகுதி மக்களிடம்
## மன்னிப்பு கேட்கிருர் பண்டிதர்!

அல்லைப்பிட்டி, ஏப். 28

இன்று ஊர்காவற்றுறை தொகுதியைப் பார்க்கின்ற போது இத்தொகுதி பல விதத்திலும் பின் தங்கியிருக்கின்றது. நாம் இருபதாம் நூற்ருண்டில் தான் வாழ்கின்ருேமா என்று கூட சிலசமயங்களில் சந்தேகப்படக் கூடியதாகவுள்ளது, நெடுந்தீவிற்கு சென்ருலென்ன மண்டைதீவிற்கு சென்ருலென்ன ஒரே பிரச்சினையாகத் தான் இருக்கின்றது. அடிப்படைத் தேவைகளை அத்தியாவசிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கக் கூடியதாகவிருந்தும் தட்டிக் கேட்பதற்கு ஓர் சரியான நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாததினுல் கேவலமான நிலையில் இருந்து வருகின்றது. தமிழரசுக கட்சிப் பிரதிநிதி ஒருவர் கடந்த காலத்தில் உறுப்பினர்களாக இருந்தும் கூட இந்நிலை ஏற்பட்டதற்கு மிக மனம் வருந்துவதுடன் தமிழரசுக் கட்சியின் சார்பில் உங்களிடம் மன்னிப்புக் கூறுகின்றேன்''

இவ்வாறு ஊர்காவற்றுறை தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் நாரந்தனை கிராமசபை முன்றலில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். நாரந்தனை கிராம சபை முன்னைநாள் தலைவர் திரு. ச. அருமைநாதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பண்டிதர் இரத்



தினம் தொடர்ந்து பேசுகையில்:-

தமிழ்மக்கள் தாம் இழந்த உரிமைகளை தமிழரசுக்கட்சி ஒன்றே பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கைக்கு விசுவாசமாக தமிழரசுக் கட்சி போராட்டங்களை நடாத்தி வருவதையும் யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. தேர்தல் காலத்தில் புற்றீசல் போல் தோன்றுகின்ற புதிய கட்சிகள் தேர்தல் முடிந்ததும் மறைந்துவிடும். ஆனுல் தமிழரசுக் கட்சியோ நாடாளுமன்றத்தில் உள்ளும், புறமும் தன்னுடைய இலட்சியத்தை கடைப்பிடித்துதான் வருகிறது. இந்நிலைமையை சரியாகப் புரிந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியும், கூட்டணியினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நிலையாகிய காங்கிரஸ் கட்சியும் எப்படியும், தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற இவ் வியக்கத்தை அழித்து விட திட்டமிட்டு அவர்கள் நடாத்தி வருகின்ற திருவிளையாடல்களை நானும், நீங்களும் அறிந்தவையே-எனவே தமிழரசுக் கட்சியை இன்று அரசாங்கத்தை அமைக்கக் கூடிய இருபெரும் கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டணிக் கட்சியினர் முழுமூச்சுடன் எதிர்க்கின்ற ஓர் கட்சியாகத்தான் இருக்கின்றது. இதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டு தமிழரசுக் கட்சிக்கு விசுவாசமாக இருந்தது போல் தொடர்ந்தும் விசுவாசமாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் என். கே. தருமலிங்கம், என். சுப்பிரமணியம், தியாகராசா, எஸ். விக்டர், க. திருவாவுக்கரசு உட்பட வேறு பலரும் உரையாற்றினர்.

# தேர்தல் சட்டங்கள்!
## வாக்காளர்செய்யக் கூடாததென்ன?

எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது என்னென்ன காரியங்களைச் செய்யக் கூடாது, அவற்றைச் செய்வதால் என்ன தண்டனை வழங்கப்படும் என்பனவற்றை விளக்கித் தேர்தல் ஆணையாளர் திரு. டயஸ் அபயசிங்கா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் விளக்கப்படுவதாவது:-

(1) தனியார் வாகனங்களான கார், டாக்ஸி, வாடகை வண்டிகள் முதலியவற்றைத்தான், அல்லது தன் குடும்பத்தினர் வாக்குப் போடப்போக, அல்லது போட்டுவிட்டு வர அனுமதிக்கப்படமாட்டாது.

(2) அப்படி இச்சட்டத்தை மீறி வாகனங்கள் பாவிக்கப் பட்டதாக எவரும் அறிவிக்கும் பட்சத்தில் அதைத் தடுத்து நிறுத்தவோ, பறிமுதல் செய்யவோ பொலிசாருக்கு அதிகாரம் உண்டு.

(3) வாகனங்களில் எவ்விதக் கட்சிக் கொடிகளோ வேட்பாளரின் சின்னக் கொடிகளோ பறக்கவிடப் படக்கூடாது.

இதை மீறிச் செய்தால் 100 ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது ஒருமாத சிறைத்தண்டனை அல்லது இரண்டுமே வழங்கப்படும்.

(4) வாக்குப் போடப் போவதற்கு இ. போ. ச: பஸ் வண்டிகளையும் புகையிரத வண்டிகளையும் மட்டுமே பாவிக்கலாம்.

(5) பொதுமக்கள் நடமாடும் எந்த இடங்களிலும் துண்டுப்பிரசுரங்களோ, சுவரொட்டிகளோ, கட்சிச் சின்னங்களோ ஒட்டப்படக் கூடாது. அரசாங்க அலுவலகங்கள், கடைகள், ஒட்டல்கள், பள்ளிக்கூடங்கள், கோவில்கள், சனசமூக நிலையங்கள், பொதுமண்டபங்கள், பஸ் நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள், தபாற் கந்தோர் தெருக்கள் என்பன ஸ்தாபிக்கப்பட்ட இடங்கள் அப்படி ஆட்சேபனைக்குரியவையாகக் கருதப்படுகின்றன.

(6) தேர்தலின்போது வாக்களிப்பு நிலையத்திலிருந்து கால் மைல் தூரத்திற்கிடையில் ஒருவருக்கு வாக்குப் போடும்படியோ, போடாதபடியோ, கேட்கப்படுவதோ அல்லது பிரச்சாரம்பண்ணுவதோ குற்றமாகும்;

(7) வாக்களிப்பு நிலைய சூழலில் எவ்வித பிரசுரங்களோ, சுவரொட்டிகளோ படங்களோ, சின்னங்களோ விநியோகிக்கப்படலாகாது;

(8) வாக்களிப்பு நிலையச் சுற்றுப்புறத்தில்ஒலிபெருக்கி பாவிக்கப்படாது.

(9) தானே நின்று சப்தமிட்டு பிரச்சாரம் பண்ணுவதோ, வாக்கு சேகரிக்கு முகமாகப் பேசுவதோகூட சட்டவிரோதமானதே.

(10) தேர்தல் பிரச்சாரத்துக்காக எந்தமத ஸ்தலங்களையும் பாவிக்கமுடியாது. அப்படியான இடங்களிலும் எவ்வித பிரசுரங்களும் வழங்கப்படக்கூடாது.

(11) தவருன எவ்வித பிரசுரங்களோ கட்டுரைகளோ தனியாகவோ பத்திரிகைகளிலோ பிரசுரிக்கப்படுவது சட்டவிரோதமானது.

(12) அதிகாரபூர்வமான எந்தப பிரசுரமும் கூட யாரால், எந்த அச்சுக்கூடத்தில் எப்போது பிரசுரிக்கப் பட்டதென அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(13) அனுமதேயப் பிரசுரங்களை அச்சிட்ட அச்சுக் கூடங்களோ, நிருவனங்களோ தண்டிக்கப்படும்.

(14) வாக்களிப்போர் வேலைத்தலங்களிலிருந்து குறிப்பிட்ட தினத்தன்று வாக்களிக்கச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். அப்படியான அவகாசம் குறைந்தது 4 மணித்தியாலமாவது இருத்தல்வேண்டும்;

வாக்களிக்கத் தரப்படும் இவ்விடைவேளைக்கு எந்த நிருவனமும் சம்பளத்தை வெட்டமுடியாது.

வாக்களிக்கப்போகாமல் எவரையும் தடுப்பதோ, அவகாசம் வழங்க மறுப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதுதவிர வாக்களிக்கும் நிலையங்களுக்குப் போகமுடியாத நிலையிலுள்ளோரும், அங்கஹீனர்களும் தமது நிலையை விளக்கித் தமது தேர்தல் அதிகாரிக்கு விண்ணப்பம் செய்தல்வேண்டும், அப்படி விண்ணப்பம் செய்வோர்க்கு வாக்களிக்கச் செல்வதற்கான வசதிகள் அரசாங்கச் செலவில் செய்து தரப்படும். விண்ணப்பமுடிவு திகதி மே மாதம் 20 ஆகும்.

ஈழத்தில்:
# வாரப்பத்திரிகை இல்லையாம் 'மணியனின்' மணிமொழி!

(கொழும்பு நிருபர்)

நேரு ஜயந்தி விழாக்களில் கலந்து கொள்ளும்பொருட்டு இப்போது இலங்கைவந்திருக்கும் 'ஆனந்தவிகடன்' துணை அசிரியர் 'மணியன்' இலங்கையில் வாரப் பத்திரிகைகளே இல்லை என்ற உண்மையைக் கண்டுபிடித்திருக்கின்ருர்.

இன்று இலங்கையில் வார வெளியீடுகள் மட்டும் அரைடசினுக்குமதிகமாக வெளிவருகின்றன. அவற்றிலெல்லாம் சிறந்த இலக்கிய சரித்திர விஞ்ஞான, ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சிறுகதை, தொடர்கதைகளும் இடம் பெறுகின்றன.

கிழக்காசியப் பத்திரிகைகளின் பேரவை இந்தியப்பத்திரிகைகளைவிட இலங்கை, மலேசியப் பத்திரிகைகளே அமைப்பிலும் விஷய அடக்கத்திலும் சிறந்து விளங்குகின்றன என்று அத்தாட்சிப் படுத்தியுள்ளது.

இது இப்படியிருக்க 'மணியன்' ஏன் இப்படித் திருவாய் மலர்ந்தருளினுர்? இதுவுமொரு 'பகீரத'ப் பிரயத்தனமா என ஈழ எழுத்தாளர்கள் எண்ணுகின்ருர்கள்.

இன்னெரு 'பெரிய' உண்மையையும் அவர் 'உதிர்த்திருக்கிருர்'! ஈழத்து எழுத்தாளர்கள் 'ஆனந்தவிகடனு'க்கு எழுதுவதில்லையாம்.

தன் 'ஜேர்னலிசத் திறமையை' மணியன்இப்படித்தான் காட்ட வேண்டுமா? என்ருலும் விகட ஆசிரியர் இப்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மட்டும் சம அந்தஸ்து வேண்டாமாம்!

45 சதவீதம் சிங்களவருள்ள திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டாம்.

—என். சிவநேசன், (26-4-70 வீரகேசரி)

தமிழன் நாடு பூராவிலும் சிங்களவருடன் சம உரிமையுடன் வாழ வேண்டும்' ஜீ.ஜீ

# காரை நகரில் தலைவிரித்தாடும் காங்கிரஸ் காடைத்தனம்!

காரைநகர், ஏப், 28

காரைநகர்க் கிராமத்தில் காங்கிரசு ஆதரவாளர்களின் காடைத்தனம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. தமிழரசு வாலிபர்கள் தனியாகக் காணப்பட்டால். அவர்களைப் பயமுறுத்தி அடிபணியவைக்க ஒரு கி. ச. அங்கத்தவர் முயன்று தோல்வி கண்டுள்ளார்.

தமிழரசுக் கூட்டத்துக்குச் சென்ற திரளான வாலிபர்களைக் கண்டு கிலிபிடித்த காங்கிரஸ் கூட்டத்தினர் அவர்களைப் பயமுறுத்துகின்றனர். சிலசமயம் அவ்வாலிபர்களின் பெற்ருேரிடமும் இதுபற்றிக் கூறி வாலிபர்களைத் திருப்பிவிடலாம் எனப் பகற்கனவு காணுகின்றனர்; ஆனுல் பெறருேர்களோ தமிழின விடுதலைக்குப் போராடும் தமிழரசுக் கட்சிக் கூட்டங்களுக்குத் தம்மைந்தர்கள் சென்று அரசியலறிவு பெறுவதையிட்டு பெருமை கொள்கிருர்கள்.

காங்கிரஸ் ஆதரவாளர்களின் கொட்டம் இது மட்டுமல்ல—காங்கிரசுக் கூட்டங்களுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாகும் வாக்குரிமையற்ற சில கூட்டத்தினர், கூட்டம் முடிந்து திரும்பும் நள்ளிரவு வேளையில் தமிழரசு வேட்பாளரை மிக மோசமான

(4-ம் பக்கம் பார்க்க)

# அரியாலை மக்களின் ஆதரவு டாக்டர் நாகநாதனுக்கே!

நல்லூர் தொகுதியை பொறுத்த மட்டில் பொய்ப் பிரசாரம் செய்பவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. அதோ அரியாலை மாறிவிட்டது. இதோ கோண்டாவில் வீழ்ந்துவிட்டது. இம்முறை தமிழரசுக் கட்சி நல்லூர்த்தொகுதியில் வெற்றிபெருது என்று பொய் பிரசாரம் செய்பவர்களுக்கு சாட்டையடி கொடுக்கும் முகமாக அரியாலையூர் மக்கள் ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளார்கள். அத்துண்டுப் பிரசுரத்தின் முழு விபரமும் பின்வருமாறு:-

தமிழ் அரசுக் கட்சியின் வெற்றிக்கொடி வானமழாவிப் பறக்கும் அரியாலையிலே மாற்றுக் கட்சியினர் அங்கொன்றும் இங்கொன்றுமாக பொய்ப்பிரசாரம் செய்து சில அலுவலகங்களை திறந்துவிட்டு தமிழ் அரசுக் கட்சியின் கோட்டையை தாம் கைப்பற்றிவிட்டோம் என்று பொய்கலந்த புகழுரையை எங்கும் பரப்பிவருகின்ருர்கள்.

மாற்றுக்கட்சியினரின் மயக்கும் மொழிக்கும், பணத்திற்கும் அரியாலை மக்களாகிய நாம் என்றும் மயங்கி விடமாட்டோம்.

தமிழுக்கு பெருமைதேடி, தமிழன் அடிமைத்தளையை தகர்த்தெறிய வல்ல ஒரே கட்சி தமிழரசுக்கட்சி என்னும் உண்மையை நன்கு அறிந்தவர்கள் நாம். நமது மனதை மாற்ற எந்த சக்திகளாலும் முடியாது. நாம் நமது உயிர், பொருள், அத்தனையும் தியாகஞ்செய்தும் தமிழ் அரசுக் கட்சியின் கோட்டையைக் காப்போம்.

(கோண்டாவில் நிருபர்)

## பேருந்துகளில் தனிச்சிங்களம்

களுவாஞ்சிக்குடி, ஏப். 25

மட்டக்களப்பில் இருந்து இரவுவேளைகளில் அம்பாறை நோக்கிச் செல்லும் பேருந்து வண்டிகளில் தனிச்சிங்களத்திலேயே பெயர்ப்பலகைகள் போடப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது அப்பேருந்து வண்டிகளில் கடமைபுரியும் சாரதி, நடத்துனர், முதலானேரும் சிங்களவர்கள் தாணும். இதனுல் சிங்களம் தெரியாத பிரயாணிகள் பேருந்து வண்டி எங்கே செல்கிறது என்பதை அறிய முடியாமல் வண்டிகளைத் தவறவிட்டு விட்டுத் திண்டாடுகின்றனர். யூ. என். பி. ஆட்சி தமிழ்பேசும் மக்களுக்கு செய்யும் நன்மை இதுதான்.

சண்முகதாசனின் உபதேசம் யாருக்கு?

அட்டன், ஏப் 23

சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற் சங்கமான இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியனின் சார்பில் சமீபத்தில் லெனின் நூற்ருண்டு விழா அட்டனில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துரையாற்றிய மேற்படி யூனியனின் தலைவர் திரு. நா. சண்முகதாசன் "உங்கள் வாக்குகளைக் கிழித்து வாக்குப்பெட்டியில் போடுங்கள்'' இல்லையெனில் 'மாசே துங் வாழ்க' என்று வாக்குச் சீட்டில் எழுதி வாக்குப் பெட்டியில் இடுங்கள் என்று கூறினுர்.

ஆனுல் தனது கட்சிக்காரரான திரு. எஸ். டி. பண்டாரநாயகாவுக்கு கம்பகா தொகுதியிலும் இப்படித்தான் வாக்களிக்க வேண்டுமா? என்பதைப் பற்றி ஏதும் அவர் கூறவில்லை.

சுதந்திரன்
SUTANTIRAN

# தமிழரசாரின் மாபெரும் மேதின விழா

யாழ்ப்பாணம்,ஏப்:29

தமிழரசுக்கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தொழிற்சங்கங்களின் ஆதரவில் தொழிலாளர் தினமாகிய மே முதல் நாள் யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான ஊர்வலமும், பொதுக்கூட்டமும் விமரிசையாக நடைபெறுகிறது.

இணுவிலிலிருந்து பொதுக்கூட்டமைதானமாகிய யாழ் முற்றவெளியை நோக்கி எழுச்சி மிக்க தொழிலாளர்களது ஊர்வலமொன்று பி. ப. மூன்று மணிக்கு தமிழரசுத் தலைவர்கள் தலைமையில் ஆரம்பமாகும்.

தமிழரசுக் கட்சியின் பலத்துக்கும் மகத்தான மக்கள் ஆதரவுக்கும் இவ்விழா ஓர் எடுத்துக் காட்டாக திகழும் என்று எதிர்பார்க்கப்படுறது.

மட்டுநகர், திருமலையிலும் தமிழரசுக் கட்சியின் மேதின விழாக்கள் அன்று நடைபெறுகின்றன.

## சண்டிலிப்பாய் பொதுமேடை:

# குழப்பத்துக்கு காரணமாயிருந்தவர் காங்கிரஸ் வேட்பாளர் சிவனேசனே!

## தலைவர் அறிக்கை உணர்த்தும் உண்மை!!

யாழ்ப்பாணம், ஏப். 27

சண்டிலிப்பாயில் நடந்த பொது மேடை விவாதத்துக்குத் தலைமைவகித்த திரு. நா. செல்வராசா அந்தக் கூட்டம் எப்படி நடந்தது, எப்படி முடிந்ததென்பது பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

சென்ற 22-4-70ல் சண்டிலிப்பாயில் நடந்த பகிரங்க பொது மேடை விவாதம் பற்றிய பத்திரிகை செய்திக்கு உடுவில் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. என். சிவநேசன் கொடுத்த விளக்கம் மக்களுக்கு இந்த விவாதத்தைப் பற்றியும், ஒழுங்கு செய்த எங்கள் கழகத்தைப் பற்றியும் தவறான கருத்துக்களைக் கொடுத்துள்ளது. எனவே அன்றைய பொது மேடைத் தலைவர் என்ற கோதாவில் நடந்தவற்றை விளக்கமாக எடுத்துரைப்பது எனது கடமை என நினைக்கிறேன்.

இம்மேடையில் இவர்கள் இருவருக்கும் கொடுக்கப்பட்ட விடயம் 'நான் ஏன் தேர்தலில் நிற்கின்றேன்?' என்பது கூட்ட விளம்பரம் பார்த்த எவருக்கும் நன்கு தெரியும்.

ஆரம்ப ஒழுங்கு இருவரும் தத்தம் கட்சிக் கொள்கைகளை விளக்குவதாகவே இருந்தது ஆரம்பத்தில் இரவு 7-30 மணிக்கு பேச ஆரம்பித்த திரு. என் சிவநேசன் நாம் கொடுத்த விதியை மறந்து சர்வகலாசாலை, மாவட்ட சபை, தமிழ்ப் பகுதியில் குடியேற்றம், மகாவலி கங்கை திசை திருப்புத் திட்டம், இலங்கை-இந்தியப் பிரச்னையில் காங்கிரஸ் என்ற தலைப்புக்களின் கீழ் திரு. வி. தர்மலிங்கத்தை விடை கூறுமாறு வேண்டி சில வினாக்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிவிட்டார். சபை மிக அமைதியாகவே கேட்டுக்கொண்டிருந்தது.

8-35 மணிக்கு திரு. வி. தர்மலிங்கம் பேச ஆரம்பித்தார். இப்போது மேடையை தாம் சவால் மேடையாகவோ அன்றி விவாத மேடையாகவோ ஏற்கவில்லை என்றும் கொள்கை விளக்கத்திற்காக வைக்கப்பட்ட மேடையில் நண்பன் சிவநேசன் கொடுத்த வினாக்களுக்கு விடை சொல்ல வேண்டிய கடமைப்பாடு உடையேன் என்றும் ஆரம்பித்து அவரது வினாக்களுக்கு விடை அளித்தார்.

அவர் பேசும்போது நண்பன் சிவநேசன் என்று பேசுவதையே விரும்பாத சிவநேசன் என்னிடம் கேட்டுக்கொண்டபடி அவரது பெயரை உச்சரித்துப் பேசவேண்டாம் என்று நான் தர்மலிங்கத்தை வேண்டிக்கொண்டேன். கூட்டத்தினர் இரண்டொரு முறை கரகோஷம் செய்ததும் உண்மை. நான் அவர்களைத் தடுத்ததும் உண்மை. கூட்டத்தினர் கைதட்டியபோது திரு. சிவநேசன் என்னிடம் தாம் அறிவித்ததாகவும் நான் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தமது பத்திரிகை விளக்கத்தில் கொடுத்திருப்பது உண்மைக்கு மாறானது.

இரண்டாம் முறை திரு. சிவநேசன் பேசத்தொடங்கியபோதே கட்டுப்பாடு மீறிய கரகோஷம் எழுந்தது. உணர்ச்சி வீறிட்ட நிலையில் நான் இதில் குறிப்பிடவிரும்பாத தேவையில்லா விடயங்களைப் பேசினார். ஆகவே தருமலிங்கமும் குறுக்கிடமுனையவே ஒலிபெருக்கியை (மைக்கை) நிறுத்தினேன். இடையில் இருக்கும் தங்களுக்குள் சில வாதங்களை வளர்த்துக்கொண்டனர்.

நான் நிலைமையைச் சமாளித்து தனிப்பட்ட நபரையோ, கட்சியையோ, தாக்காது பேசும்படி வேண்டி திரும்பவும் சிவநேசனை பேச விடுத்தேன். மீண்டும் அதே பல்லவி ஆரம்பமானது. மக்கள் மேடையை நோக்கி நகர்ந்தனர். பொலிசார் ஒலி பெருக்கி தொடர்பைத் துண்டித்தனர். யான் கூட்டம் முடிந்ததாக அறிவித்தேன். தர்மலிங்கத்தை அவரது ஆதரவாளர்கள் தூக்கிச்சென்றனர்.

சில நிமிடங்கள் யானும், சிவநேசனும் மேடையில் நின்று அவரை அவரது ஆதரவாளர்கள் தூக்கிச் சென்றபின் நானும் மேடையை விட்டு விலகிச் சென்றேன்.

சிவநேசனின் விளக்கத்தில் குறிப்பிட்டவாறு நான் அவரை தனிமையாக மேடையில் விட்டுச் செல்லவில்லை. இதுதான் அன்று நடந்த உண்மைச் சம்பவம்; இது பரமரகசியம் அல்ல. கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அறிந்த உண்மை.

---

### பச்சை பச்சையாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகின்றேன். ''ஜனநாயகம்'' பற்றி ஒவ்வொரு கூட்டத்திலும் வானளாவ அளக்கும் கௌரவ பிரதமரின் சர்வாதிகாரத்தின்-பட்டான ஆட்சியின்—ஒரு சிறு அத்தியாயம்தான் இது.

விவசாய மேம்பாடு (?) பற்றியும் மகாவலித் (பெரிய தலைவலி) திட்டம் பற்றியும் எக்கச்சக்கமாக வாந்தியெடுத்துத் தள்ளுகிறது வானொலி! ஈழத்தில் இன்று உணவு உற்பத்தி முன்னேறியிருந்தால் வெட்டப்பட்ட அரிசியை இன்று வழங்கலாமே! ஈழமக்களை நன்கு ஏமாற்றப்பார்க்கிறார் பிரதமரும் அவரது மந்தி(ரி)களும்—

வானொலியில் 'செய்திச் சுருக்கம்' என்ற போர்வையின் கீழ் ஐ. தே. க. வின் பிரசாரம் நடப்பது அந்த முதலாளித்துவக் கட்சியின் ஜனநாயகக் கொள்கை எப்படிப் பட்டது என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டி வருகிறது—

இவைமட்டுமல்ல — இப்பொழுது சில நாட்களாக பிரஜாஉரிமை இல்லாதவர்களை பிரஜா உரிமை கோரி விண்ணப்பிக்கும்படி அறிவிக்கும் அறிவித்தலிற் கூட துவேஷ மனப்பான்மை தெரிவதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது- அந்த அறிவித்தலின் இறுதி வரிகள் வருமாறு ''...........இந்தியா செல்ல விரும்பினால் அங்கு சென்று, குடியேறி, வாழ வசதிகள் செய்துதரப்படும். எனவே, பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கவும்—''

இந்த அறிவித்தலின் அர்த்தமென்ன? இது 'இந்தியப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கவும்' என்று மக்களைத் தூண்டுவது போலல்லவா உள்ளது! ஏன் இந்த விஷமப் பிரசாரம்? இதுதான் ஒரு ஜனநாயக நாட்டின் வானொலியின் சேவையா?

இவ்வாறு கேட்கிறார் அந்த நேயர். இதே கேள்வி பலாது உள்ளங்களை குடைந்து கொண்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

(அ. நி)

---

### யூ.என் பி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியாக படிப்படியாக கொண்டு வரப்படும் என்று கல்வியமைச்சர் இரகசியமாகக் கூறியிருப்பதாக செய்திகள் வந்தன.

இந்த நிலையில், இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள யூ. என். பி. தேர்தல் விஞ்ஞாபனத்தில்—போதனாமொழிப் பிரச்சினை குறித்து திட்டவட்டமான கொள்கை எதுவும் கூறப்படவில்லை— தேசியமொழிகளே போதனா மொழியாக இருக்கும் என்று பொதும்பலாக மழுப்பப் பட்டிருக்கிறதே தவிர தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழி தமிழாகவேயிருக்கும் என்று எவ்வித தெளிவான உறுதி மொழியும் கூறப்படவில்லை- ்த்துடன், அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம், தமிழ், ஆகிய இரு மொழியிலும் ஓரளவு தேர்ச்சி வேண்டுமென்ற யூ. என். பியின் 1965ம் ஆண்டுக் கொள்கையும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து யூ. என். பியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவுமே காணப்படாததனால் தமிழ் மக்கள் ஆனைக்கட்சிமீது மிகுந்த அதிருப்தியடைந்துள்ளனர்—

இதேபோல கூட்டுக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனமும் போதனாமொழிகுறித்து திட்டவட்டமான கருத்தை முன்வைக்கத் தவறிவிட்டது. நீதிமன்ற மொழியாக சிங்களம் திணிக்கப்படும் என்று கூட்டுக்கட்சி விஞ்ஞாபனம் வேறு கூறியுள்ளதும் இக்கட்சிகள்மீது தமிழ் மக்களின் வெறுப்பைக் கூட்டியிருக்கிறது.

இரண்டு சிங்களக் கட்சிகளும் ஒரே மாதிரியானவையே. இரண்டில் எதையும் தமிழர் ஆதரிக்கக் கூடாது என்ற ஒரு அபிப்பிராயமும் வளர்ந்து வருகிறது—

---

### ஈழத்தில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படிச் சொல்லித் தப்பித்துக் கொள்வது அழகல்ல.

இப்படித்தானே அவர் தன் பிரயாணக் கட்டுரையிலும் வரைந்து தள்ளப் போகின்றார்?

---



## அத்தானின் மண்டபம்

'அத்தான்......!'

'கண்ணே......'

'டாக்டர் நாகநாதனை எதிர்த்து நல்லூரில் அருளம்பலம் என்று ஒரு பெரிய மனிதர் போட்டியிடுகிறாராமே!'

'கண்ணே...' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் என்றல்லவா சொல்வார்கள். தமிழினத்தின் நன்மைக்காக போலிசாரிடமும் பொல்லாத சிங்களக் காடையரிடமும் அடியும் உதையும் வாங்கியவர் நாகநாதன். பிரபலமான ஒரு டாக்டராக வாழ்ந்திருக்க வேண்டியவர் தமிழினத்தின் நன்மைக்காகப் போராடப் போய் இன்று ஒரு நோயாளியாக வாழ்கிறார்! ஆனால் அருளம்பலம் என்ன செய்திருக்கிறார்!... சாப்பிட்டதும் சீவிச்சதும் தானே மிச்சம்!'

'அப்படியா அத்தான்... அருளம்பலம் பெரிய மனிதர் இல்லை என்கிறீர்களா? சரி... அப்படியானால் அவரை 'சிமோல்' அருளம்பலம் என்று சொல்லுங்கள்!

---

### டட்லியிடம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் நம்பிக்கை வைத்தார்கள். தனிச் சிங்களத்தைக் கொண்டுவந்த அரசை நிம்மதியாக ஆட்சி நடாத்த முடியாமற் செய்தோம். இரண்டு மாதங்களாக கச்சேரி நிர்வாகத்தையே நிற்கச் செய்தோம். நாம் அற்ப சலுகைகளுக்கு ஆசைப்பட்டிருந்தால், எப்பொழுதோ தனிச் சிங்களம் கொடிகட்டிப் பறந்திருக்கும். பெருகி வந்த சிங்கள வெள்ளத்தை கட்டுப்படுத்தி, ஓரளவு உரிமைகளையாவது சட்டபூர்வமாகப் பெற்றிருக்கின்றோம். நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்து செயற்பட்டோம். மன்னருக்குச் செல்லாத காங்கிரஸ்வாதிகள் கிழக்கு மாகாணத்தை எப்படி இணைப்பார்கள்? டட்லியே உன் பாதாரவிந்தமே தஞ்சமென்று மண்டியிட்டவர்கள், எப்பொழுதாவது சம அந்தஸ்து என்று பாராளுமன்றத்தில் கேட்டதுண்டா?

வடமாகாணத்தில் மாத்திரம் சம அந்தஸ்து என்று கூக்குரல் போட்டுவிட்டு, அங்கே பச்சைப் போர்வையைப் போர்த்திக் கொண்டு திரிபவர்கள்...... இனத்தை ஏமாற்றி பதவி பெறுவது தான் இவர்களது இன்றைய கொள்கையென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எமது இயக்கத்தின் தந்தை செல்வா என்றால், தாய் டாக்டர் நாகநாதன் அவர்களே, எம்மைப்பெற்ற தாய் கிழவியாகிவிட்டால், வேறு இடத்தில் ஒதுக்கிவிடுவோமா? எனவேதான் வயது முதிர்ந்தவர்களே எமது வழிகாட்டிகள் என்பதையுணர்ந்து, அனைவரும் ஒரே அணியில் நின்று உரிமைக்குரலெழுப்பக்கூடியதாக தமிழரசுப் பிரதிநிதிகளை மீண்டும் அனுப்பிவையுங்கள்.

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றினார்கள். மற்றும் திரு. வி. தாமலிங்கம், க. துரைரத்தினம், பண்டிதர் இராசையா உட்பட பலர் உரையாற்றினார்கள். டாக்டர் நாகநாதன் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினார்.

---

### மாணிக்கவாசகருக்குப் பெருகிவரும் ஆதரவு!

வாழைச்சேனை, ஏப். 28

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது தமிழ்பேசும் இன மக்களின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் இருந்த உத்தமர் - உயர்ந்த மனிதர் - சீர்திருத்தச் செம்மல் - செயற்கரிய செய்த பெரியார் திரு. மாணிக்கவாசகருக்கே எங்கள் உடல் -உயிர் - உடமை என்று உணர்ச்சிவசப்பட்ட இளைஞர் கூட்டம் ஓட்டுவேட்டையில் இறங்கியுள்ளது. தமிழரசு உறுப்பினருக்கு எதிர்பாராத அளவு முஸ்லீம் கிராமங்களிலும், குடியேற்ற பகுதிகளிலும், தமிழ் பகுதிகளிலும், ஆதரவு நாளுக்கு நாள் விசம் போல் கூடிவருகிறது.

---

### காரைநகரில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் திட்டித்தீர்ப்பதுடன் சந்திக்குச்சந்தி நின்று கூக்குரலிடுகின்றனர்.

இது மட்டுமன்றி ஒவ்வொரு வீட்டுப் படலையின் முன்பும் நின்று இவர்கள் செய்யும் கூக்குரலினால் மக்கள் அமைதியை இழந்துள்ளனர். இவ்வாறு தமிழரசுக் கட்சிக்கு எதிராக இவர்கள் செய்யும காடைத்தனங்களும் பொய்ப் பிரசாரங்களும் நாளுக்குநாள் பெருகி வருகின்றன.

---

### தொண்டமான்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (திரு தொண்டமான் தலைமையிலுள்ளது) தொழிற் சங்கத்தின கடந்த கால முக்கிய பிரமுகர்களான இவர்கள் தற்சமயம் தொழிலாளர் தேசிய சங்க முக்கியத்தர்களாவர்.

தமிழர்களான இவர்களுக்கு தொண்டமான் தலைமையிலான இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்குமா? என்ற கேள்வி இப்பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

---

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் ஏப்பிரல் மாதம் 30-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்.